28.04.2026

அ.வ.எண். 137/2025

வா.சா.2– திருமதி. ரேவதி, த/பெ. சின்னசாமி, க/பெ.வடிவேல்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 28.04.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். 12.11.2008 தேதியில் என் தந்தை சின்னசாமிக்கும் பிரதிவாதிக்கும் கிரய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். கிரய ஒப்பந்த காலம் என்பது 1 ஆண்டு காலம் ஆகும். கிரய ஒப்பந்தமானது, 11.11.2009 ல் முடிவடைந்தது என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் கடந்த 12.11.2008 ம் தேதியன்று சொத்து குறித்து ஏற்படுத்திய கிரய ஒப்பந்தத்தினை ரத்து செய்து ஒப்பந்த காலம் முடிந்து ஒரு வார காலத்திற்குள் எனது தந்தையும், எனது தாயாரும் கேட்டார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது தந்தை சின்னசாமி 01.04.2011 ம் தேதியில் இறந்தார். எனது தந்தையின் வாரிசு சான்றிதழில் எனது அம்மா சாந்தாமணி, எனது தம்பி தமிழரசன், நானும், எனது பாட்டி மாரம்மாளின் வாரிசுகளாக குறிப்பிடப்பட்டுள்ளோம். எனது பாட்டி மாரம்மாள் எப்போது இறந்தார் என்றால் என் அப்பா இறந்து,2 ஆண்டுகள் பின்னிட்டு இறந்துவிட்டார். என் பாட்டி மாரம்மாளுக்கு 2 ஆண் வாரிசுகள், அவர்கள், 1. சின்னசாமி, 2. கருப்புசாமி ஆவார்கள். கருப்பசாமி 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். கருப்புசாமியின் வாரிசுகள் 1. மனோன்மணி, 2. வசந்த், 3. கலைவாணி ஆவார்கள். தாவா சொத்தை எனது தந்தை சின்னசாமி, 10.01.2005 ம் தேதியில் கிரய பத்திரத்தின் படி வாங்கினார். தாவா சொத்தில், கருப்புசாமியின் வாரிசுகள் 1. மனோன்மனி, 2. வசந்த், 3. கலைவாணி ஆகியோருக்கு எனது பாட்டி மாரம்மாள் இறந்த பிறகு உரிமை உள்ளது என்றால் இல்லை, என் அப்பாவும், என் அம்மாவும் சுயமாக சம்பாதித்தது.

3. தாவா சொத்தை என் அப்பா மட்டும் சுயமாக சம்பாதித்து வாங்கினார் என்றும், என் தாயார் வாங்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ளோம். பிரமாண வாக்குமூலத்தில், 3ம் தரப்பினருக்கு தாவா சொத்தை வாதிகள் விற்க முயற்சி செய்தோம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி பிரச்சனை செய்ததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு வாய்மொழியாக சொல்லி அனுப்பினார்கள். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் காவல் நிலையத்தில் பேசி அனுப்பிவிட்டார்கள்.

4. நான் காவல் நிலையத்தில் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி இந்த வழக்கில் மாரம்மாள் வாரிசான கருப்புசாமியின் வாரிசுகளை சேர்த்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கருப்புசாமியின் வாரிசுகளுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த காலம் முடிந்து மூன்று வருடங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும், அவ்வாறு தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு மூலம் இல்லாமல் பொய்யான சங்கதிகளை கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை கூறி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

குறுக்குவிசாரணைக்காக வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.

| |
|---|
| Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct<br><br>Sd./M.Santhosham<br>District Munsif, Sulur |